**CC.No. 1 /2017**

**Deposition of PW.1**

**Name : Pushparaj**

**Dated : 27.11.2019**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்த 05.03.2001 சமயத்தில் எங்களது வனச்சரக அலுவலகம் பொன்மனையில் அமைந்திருந்தது. அது குலசேகரம்-சுருளோடு சாலையில் அமைந்துள்ளது. நாகா்கோவில் -தடிக்காரணன்கோணம் சாலையில், துவரங்கோடு ஜங்சனில் இருந்த வனச்சரக அலுவலகம் எந்த ஆண்டு, மேற்படி குலசேகரம்-சுருளோடு சாலைக்கு மாற்றப்பட்டது என்று தெரியாது. எங்களது வேளிமலை வனச்சரக அலுவலகம் முன்பு துவரங்கோடு ஜங்சனில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. 05.03.2001 அன்று நான் தணிக்கைக்கு, வனச்சரக அலுவலகத்தில் இருந்து செல்லவில்லை முக்கூடல் தலைமை இடத்திலிருந்து (HeadQuater) சென்றேன். முக்கூடல் தலைமைஇடம், அது முக்கூடல் அணைப்பகுதியில் உள்ளது. முக்கூடல் அணைப்பகுதியில் அந்த சமயத்தில் வனச்சரக அலுவலகம் இல்லை. முக்கூடல் அணைப்பகுதியின் பராமரிப்புக்கும் (PWD) கட்டுப்பாட்டில் உள்ளது என்றால், எனக்குத் தெரியாது. அந்த முக்கூடல் தலைமை இடத்தில் (PWD) வாட்சா் இருந்தாா். அவருடன் எத்தனை போ் இருந்தாா்கள் என்று எனக்குத் தெரியாது. முக்கூடல் அணைப்பகுதிலிருந்து வனப்பகுதி வழியாக நான் சம்பவம் இடத்திற்கு சென்றேன். முக்கூடல் அணைக்கட்டிலிருந்து எந்த திசையில் சம்பவ இடமான வாழைகுழி சராகம் அமைந்திருந்தது என்று எனக்கு தெரியவில்லை. முக்கூடல் (HeadQuaterலிருந்து) நான் அதிகாலை 4.00முதல் 4.30 மணியளவில் தணிக்கைக்கு கிளம்பினேன். எனது தலைமை இடத்தில் இருந்து, சம்பவம் நடந்த வாழைகுழி 2 கி.மீ. தொலைவில் உள்ளது. வாழைகுழி கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் இருக்கும் என்று எனக்கு தெரியாது. வாழைகுழி பகுதியில் தேக்கு மரங்கள் தவிர மற்ற வகையான மரங்களும் உண்டு. இந்த வாழைகுழி சராகத்திற்கு போவதற்கு வேறு வழியாக, அதாவது ஒற்றியோடு எருமைப்பட்டி வழியாக செல்லலாம். எருமைப்பட்டியிலிருந்து, வாழைகுழி எவ்வளவு தொலைவில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எருமைப்பட்டியில் சாஸ்தா கோவில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

எருமைப்பட்டியில் தனியாருக்கு சொந்தமான தோட்டங்கள் ஒற்றியோடு ஊருக்குப் பக்கத்தில் உள்ளது. நான் தணிக்கைக்கு சென்றபோது சம்பவ இடத்தில் காலை 5.00 மணிக்கு சென்றடைந்தேன். ஆஜர் எதிரி மற்ற எதிரிகள் எந்த திசையில் ஓடினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. வெட்டப்பட்ட மரங்கள் 15 வயதிற்கு மேல் இருக்கும். எனில் வெட்டப்பட்ட மரம் சுமார் 15 அடிகளுக்கு வளர்ந்திருக்கும். நான் பார்த்த வெட்டு மரத்துண்டுகள் எத்தனை அடி நீளம் இருந்தன என்று நினைவில் இல்லை. வெட்டுமோடுகள் தரையிலிருந்து 30 முதல் 40 செ.மீ. உயரத்தில் இருந்தன. 5 வெட்டுமோடுகளுக்கும் இடையே இருந்த தூரம் எனக்கு நினைவில் இல்லை. வெட்டுமோடுகளிலிருந்து 50 அடி தூரத்தில் வெட்டுமரங்களை தூக்கி கொண்டு வந்தார்கள். நான் தயார் செய்த எச் நமூனாவில் உள்ள 5 வெட்டுமரத்துண்டுகளை தவிர வேறு மரத்துண்டுகள் எதையும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால்,சரிதான். அந்த வெட்டுமரத்துண்டுகளுக்கு சிவப்பு மை முத்திரை மற்றும் முகக்கோடாரி முத்திரை வைத்தது யார் என்று எனக்கு நினைவில் இல்லை. ஆஜர் எதிரி சஜேந்திரனின் சொந்த ஊர் முகவரி போன்ற விவரங்கள் எனக்கு நினைவில் இல்லை. ஆஜர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவுசெய்தபோது, எதிரிகள் எந்த நேரத்தில் வனப்பகுதிக்குள் நுழைந்தார்கள், எந்த வழியாக வனப்பகுதிக்குள் நுழைந்தார்கள் மற்றும் எவ்வளவு நேரம் அங்கு இருந்தார்கள் என்பது பற்றிய விவரங்களை நான் விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடன் வேறுயார் கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. யார் முன்னிலையில் பதிவு செய்தேன் என்ற விவரம் எனக்கு நினைவில் இல்லை. எந்த எதிரி வாளை கொண்டு போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பெயர் நினைவில் இல்லை. நான் பெயரை பற்றி விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. ஸ்தலமகஜரை தயார் செய்தேன். முக்கூடல் தலைமையிடத்திலிருந்து தணிக்கை செய்யச் சென்றேன் என்று ஸ்தல மகஜர், வனக்குற்ற அறிக்கை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். தற்பொழுது நான் முதன்முறையாக அந்த விவரத்தை குறிப்பிடுகிறேன் என்றால், சரிதான். கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை சம்பவ இடத்திலிருந்து எருமைப்பட்டி வரை சுமந்து செல்வதற்கு 5 வேலையாட்களை பயன்படுத்தினோம். அவர்களின் யாருடைய பெயரும் எனக்கு நினைவில் இல்லை. எருமைப்பட்டிலிருந்து வாடகை வாகனத்தில் வழக்கு சொத்துக்களை வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். அப்பொழுது தணிக்கைக்கு என்னுடன்

வனவர்கள் சந்திரசேகரன், முருகன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். 05.03.2001 சமயத்தில் எங்களது வேளிமலை வனச்சரக அலுவலர் பெயர் நினைவில் இல்லை. இந்த வழக்கு பற்றி சம்பவத்தை பற்றி என்னை விசாரித்த விசாரணை அதிகாரி பெயர் நினைவில் இல்லை. வாடகை வாகனம் எந்த ஸ்டேன்டில் எடுத்தோம், வாகன ஓட்டுநர்,பெயர் விவரங்கள் நினைவில் இல்லை. அந்த வாகனத்திற்கான ட்ரிப்சீட் வாங்கவில்லை. எதிரியை வனத்துறை ஜீப்பில் வனத்துறைக்கு அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். எருமைப்பட்டிக்கு எங்களது ஜீப் 5.30 மணிக்கு வந்தது. நாங்கள் எதிரியுடன் ஜீப்பில் வந்தோம். வெட்டுமரங்கள் டெம்போவில் வந்தது. இந்த விவரங்கள எந்த வழக்கு ஆவணங்களிலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரியை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால், சரியல்ல. எதிரியை அவரது சொந்த ஊரான பெருஞ்சிலம்பு என்ற இடத்தில் வைத்து கைது செய்து, அவர் மீது தவறுதலாக வழக்கு செய்யப்படுகிறது என்றால், சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு வனச்சரக அலுவலகத்தில் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும், அதை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் குறிப்பிடுவதுபோல பொன்மனையில் வனச்சரக அலுவலகம் இல்லை என்றாலும், துவரங்காடு வனச்சரக அலுவலகத்தில் வைத்து ஆவணங்களை கற்பனையாக தயார் செய்து தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி வனப்பகுதிக்குள் நுழையவில்லை என்றாலும், வாழைகுழி வனப்பகுதி என்பதற்கான ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யவில்லை. எருமைப்பட்டிலிருந்து வனச்சரக அலுவலகம் சமார் 10 கி.மீ தூரம் இருக்கும். எருமைப்பட்டிலிருந்து வனச்சரக அலுவலகத்திற்கு பஞ்சாயத்து ரோடு வழியாகத்தான் வாகனத்தில் வந்தோம் என்றால், சரிதான். எதிரியை எத்தனை மணிக்கு வனச்சரக அலுவலகத்திற்கு கூட்டிக்கொண்டு வந்தோம் என்ற விவரம் நினைவில் இல்லை.

.